பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 02 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் செமி கண்டெக்டர் கட்டமைப்பை வலுப்படுத்த பத்து முக்கிய திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஐரோப்பிய யூனியனுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

3. ஆந்திரப்பிரதேச மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

4. இஸ்ரேல் படையினர் தெற்கு ஈரானில் நடத்திய வான்வழி தாக்குதலில் 40-க்கும் மேற்பட்ட பள்ளி சிறுமிகள் உயிரிழந்தனர்.

5. ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

- - இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

நாட்டின் செமி கண்டெக்டர் கட்டமைப்பை வலுப்படுத்த பத்து முக்கிய திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் **Sanand**-தில் மைக்ரான் செமி கண்டெக்டர் தொழில்நுட்ப நிறுவனத்தின், செமி கண்டெக்டர் கருவிகள் உற்பத்தி, பரிசோதனை மற்றும் பாக்கேஜிங் வசதியை தொடங்கிவைத்து பேசிய அவர், நொய்டா, அஸ்ஸாம் உள்ளிட்ட இடங்களிலும் புதிய செமி கண்டெக்டர் திட்டங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக தெரிவித்தார்.

மின்னணு மற்றும் ஆட்டோ மொபைல் தேவையை கருத்தில் கொண்டு அதன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாடு பற்றி குறிப்பிட்ட பிரதமர், இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் திறனை உலக அரங்கிற்கு இந்த உச்சி மாநாட்டின் மூலம் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் கடந்த பத்தாண்டுகளாக மின்னணு மைக்ரோ சிப் தொழில்நுட்பம் சிறப்பான பங்காற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா — அமெரிக்கா இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேசிய பிரதமர், மைக்ரோ சிப், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளிலும் இருதரப்பு வர்த்தகம் விரிவடைவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

வர்த்தக ரீதியிலான உற்பத்திக்கு இந்தியா உத்வேகம் அளித்து வருவதாக தெரிவித்த பிரதமர், உலக நாடுகள் இடையே இந்தியா நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மைக்ரான் நிறுவனம் செமி கண்டெக்டர் தொழில்நுட்பத் துறையில் மேற்கொண்டுள்ள புதிய முயற்சி வரலாற்று சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டார்.

உலக வரைபடத்தில் மின்னணு உற்பத்தித் துறையில் இந்தியா முக்கிய மையமாக இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு வந்த மைக்ரோ சிப்புகள், தற்போது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் மின்னணு கட்டமைப்பின் அடிப்படைத் தொழிலாக செமி கண்டெக்டர் உற்பத்தித் தொழில் வலுப்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

மின்னணு உற்பத்தியில் இந்தியா ஆறு மடங்கு உயர்ந்திருப்பதாகவும், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி எட்டு மடங்கு அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் எடுக்கப்பட்டுவரும் சீரிய முயற்சிகளின் பயனாக இந்தியாவின் செல்போன் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்திய — ஐரோப்பிய யூனியன் நல்லுறவு மேம்பாடு தொடர்பான ஆலோசனைக்குழு கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று பங்கேற்றார்.

பின்னர், இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருதரப்பிலும் பயன்தரத்தக்க வகையில், ஒத்துழைப்பு மேம்பட்டு வருவதாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை மேலும் பெருக்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் தம்முடன் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆக்கப்பூர்வமான கருத்துகளை பகிர்ந்துகொண்டதாக டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

ஆந்திரப்பிரதேச மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் **21** தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இதில் பலருக்கு காயம் ஏற்பட்டது.

இந்த தொழிற்சாலையிலிருந்து பட்டாசுகள் வெடித்ததால் அதன் தாக்கம் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் உணரப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் காக்கிநாடா, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, நிலைமையை ஆய்வு செய்து வருகிறார்.

உடனடியாக அமைச்சர்கள் சம்பவ இடத்திற்கு சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

தில்லி மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில் ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் விடுவிக்கப்படுவதாக தில்லி நீதிமன்றம் அளித்த உத்தரவில் தவறுகள் இருந்தால் மேல் முறையீடு செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இமாச்சலப்பிரதேச மாநிலம் **Kangra** விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூடுதல் நீதிபதிகள் கொண்ட அமர்விலோ அல்லது மேல் நீதிமன்றங்களிலோ முறையீடு செய்யப்படும் என்று கூறினார்.

தாம் குற்றமற்றவர் என திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறுவதில் உண்மை இல்லை என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஈரான் மீது அமெரிக்காவுடன் இணைந்து ராணுவ தாக்குதல் நடத்தியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

காணொலி வாயிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றிய அவர், இந்த தாக்குதல் நடவடிக்கைக்கு ஆபரேஷன் **Lion's Roar** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஈரானின் நடவடிக்கையை தடுக்கும் வகையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப்புக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டுவரும் ஈரான் தலைமையை அவர் கண்டித்துள்ளார்.

ஈரானில் அரசியல் மாற்றத்தை கொண்டுவருவதற்காக இந்த தாக்குலை நடத்தியுள்ளதாக திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்தார்.

டெஹ்ரான் உள்ளிட்ட ஈரானின் பல்வேறு நகரங்கள் தாக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு **Isral Katz** தெரிவித்துள்ளார்.

டெஹ்ரானில் ஈரான் தலைவர் திரு **Ayatollah Alikhamenei-**யின் அலுவலகங்களுக்கு அருகே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, வான்வழியை மூடியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இணையதள சேவையும், மொபைல் சேவைகளும் முடக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான், அபுதாபி, பக்ரைன், குவைத் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

பக்ரைனின் மனாமா நகரங்களில் உள்ள அமெரிக்க கடற்படையின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பக்ரைன் உறுதி செய்துள்ளது.

கத்தார் மீது ஏவப்பட்ட ஏவுகணைகளை அமெரிக்காவின் பேட்ரியட் ஏவுகணைகள் மூலம் வானிலேயே அழிக்கப்பட்டதாக கத்தார் கூறியுள்ளது.

இதனிடையே, ஈரானில் நிலவிவரும் பிரச்சினையில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று ஐரோப்பிய யூனியன் வெளியுறவு கொள்கைத் தலைவர் **Kaja Kallas** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் **Gideon Saar**-ருடன் ஆலோசனை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், வளைகுடா பகுதிகளுக்கான ஏர் இந்தியா, ஏர் ஃபிரான்ஸ், பிரிட்டஷ் ஏர்வேஸ், இண்டிகோ உள்ளிட்ட பல்வேறு விமான நிறுவனங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல் காரணமாக ஈரானில் ஆங்காங்கே உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதாக அந்நாட்டின் அரசு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு ஈரானின் **Minab** பகுதியில் பள்ளியின் மீது நடந்த வான்வழி தாக்குதலில் **40**-க்கும் மேற்பட்ட பள்ளி சிறுமிகள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், அபுதாபியில் குடியிருப்பு பகுதிகளுக்கு அருகே நடந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும், பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அபுதாபியில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

தேவையில்லாமல் வெளியே வர வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துபாயில் உள்ள தூதரகம் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும், இதுதொடர்பான தகவல்களை வெளியிட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் பகுதிகளுக்கான தேசிய மாணவர் படை தலைவராக **Commodore Nambiath Sudeep** இன்று பதவியேற்றார்.

இப்பதவியை வகித்து வந்த **Commodore** ராகவ் இன்று ஓய்வு பெற்றதையடுத்து, **Commodore Nambiath Sudeep** புதிய தலைவராக பதவியேற்றுக்கொண்டார்.

சென்னையை தலைமையிடமாக கொண்ட தேசிய மாணவர் படை இயக்குனரகம் தமிழகம், புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளை உள்ளடக்கியது.

இந்த இயக்குனரகம் தற்போது ஆறு குழு தலைமையகங்களையும், ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை பிரிவுகள் உட்பட **59** பிரிவுகளையும் கொண்டுள்ளது.

பள்ளி, கல்லூரிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இதில் தேசிய மாணவர் படை வீரர்களாக இணைந்துள்ளனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ரஞ்சி கிரிக்கெட் கோப்பையை ஜம்மு காஷ்மீர் அணி முதல் முறையாக கைப்பற்றியது.

ஹூப்பளியில் நடைபெற்ற கர்நாடகாவுக்கு எதிரான இறுதியாட்டம் டிராவில் முடிவடைந்தையடுத்து, முதல் இன்னிங்சில் கூடுதல் ரன் எடுத்த ஜம்மு காஷ்மீர் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

------------------

குருகிராம் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சீல் தேசாய் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Ekaterina Yashina** -வை வென்றார்.

**<<<<<<END>>>>>**